# DEPOSITION OF WITNESS

(Chapter XXV BNSS)

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**
**ST.C.No. 1176/2022 P.W. 1 பாலன் த/பெ. சுந்தரம்**

நாள் 05.11.2025

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாககல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

என்னுடைய முகவரி என்ன என்றால் 12, மாலா இல்லம், டேனியல் தாமஸ் நகர், பழைய வீட்டு வசதி வாரியம், தஞ்சாவூர். மேற்படி முகவரியில் உள்ள வீடு எனது சொந்த வீடா என்றால் அது எனது வாடகை வீடு. மேற்படி வீட்டில் தான் நான் குடியிருக்கிறேனா என்றால் இல்லை. கடந்த 5 ஆண்டுகளாக வடுவூர் தென்பாதி குடியிருந்து வருகிறேன். நான் எந்த பரிகாரம் வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு முதல் கொடுத்தால் போதும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வேறு எந்த பரிகாரம் வேண்டி நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செக் கொடுத்ததனால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

எதிரியாகிய மாணிக்கம் எவ்வாறு எனக்கு தெரியும் என்றால் அவர் வாத்தியார் வேலை பார்க்கிறார். எனது பையன் அந்த ஸ்கூலில் படித்ததால் போகும் போது வரும் போது பழக்கம். இந்த வழக்கு தொகையை எதிரி எப்போது எந்த தேதியில் கேட்டார் என்றால் 28.12.2020 ம் தேதியில் பணம் கொடுத்தேன். அவர் எந்த தேதியில் கடன் கேட்டார் என்றால் அதற்கு முன்பு ஒரு மாதத்திற்கு முன்பு கேட்டார்.

ஒரு மாதத்திற்கு முன்பு எதிரி பணம் கேட்ட விபரத்தை வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியிருக்கிறேன். நான் மேற்படி விபரத்தை நான் சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பணம் கொடுத்ததாக சொல்லப்படும் 28.12.2020 ம்தேதியில் காசோலையை பெற்றுக்கொண்டு பணத்தை கொடுத்தேன் என்றால் சரிதான். அதனை எதிரி தான் அவர் கையாலேயே நிரப்பி கொடுத்தார். எதிரி நிரப்பி கொடுத்த காசோலையில் 28.12.2020 ம் தேதி போட்டு காசோலை தொகை ரூ.3,10,000/- தொகை குறிப்பிட்டு எனது பெயர் நிரப்பி கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி விபரத்தை தான் நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

எதிரி எனக்கு அன்றைய தேதியில் எத்தனை காசோலை கொடுத்தார் என்றால் ஒரு காசோலை தான் கொடுத்தார். எதிரி மாணிக்கத்திற்கும், எனக்கும் இதற்கு முன்போ, பின்போ கொடுக்கல் வாங்கல் உள்ளதா என்றால் இல்லை. எதிரி மீதும், எதிரி குடும்பத்தார் மீதும் வேறு எந்த நீதிமன்றத்திலும் வழக்கு நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு தொகையை எதிரிக்கு ரூ.3,10,000/- தொகையாக கொடுத்தேனா அல்லது வங்கி பரிவர்த்தனை மூலம் கொடுத்தேனா என்றால் ரொக்கமாக தான் கொடுத்தேன்.

இந்த வழக்கு தொகை எதிரிக்கு கைமாற்று கடனாக கொடுத்தேனா அல்லது வட்டிக்கு கொடுத்தேனா என்றால் கைமாற்று கடனாக கொடுத்தேன். நான் தொகை கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் எதிரியிடமும், எதிரியின் மனைவியிடமும் இரண்டு காசோலை வாங்கியுள்ளேனா என்றால் சரியல்ல. எதிரியின் மனைவி குமுதா பெயரில் நான் தஞ்சாவூர் காசோலை மோசடி வழக்கு விசாரிக்கும் விரைவு நீதிமன்றத்தில் STC.5/2023 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தஞ்சாவூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் குமுதாவிற்கு பணம் கொடுத்தேன் என்றால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை.

தஞ்சாவூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கில் எவ்வளவு தொகைக்கானது என்றால் ரூ.3,00,000/- ஆனது. கைமாற்று கடனாக கொடுத்ததாக சொல்லப்படும் தொகை வட்டிக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. தொகைக்குரிய வட்டியை எதிரி மாதமாதம் தவறாமலம் எதிரி என்னிடம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரி கொடுத்த தொகையும், எதிரியின் மனைவி குமுதாவிற்கு கொடுத்த தொகையும் வேறு வேறு என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரி என்னிடம் வாங்கிய தொகைக்கு அதிகமாகவே வட்டி தொகையை செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.